பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சித்தர்களின் மருத்துவப் பதிவுகள்

64

**கா.ஹர்ஷினி துர்க்கா [1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]**

**[1]முதுகலை முதலாமாண்டு தமிழ், [2]இணைப்பேராசிரியர்,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

**கோயம்புத்தூர் - 641043**

**மின்னஞ்சல் – harshinidhurka13082004@gmail.com ,**

**priyadharshini_tam@avinuty.ac.in**

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழர்கள் இயற்கையில் வளர்த்த மருத்துவகலையே “சித்தமருத்துவம்” ஆகும். இதனை தமிழ் மருத்துவம் என்றும் கூறுவர் .ஒன்று, அரை, கால் என்ற விகிதத்தில் மனித உடலில் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் நிறைந்து இருக்கும். இதன் அளவு அதிகரிக்கும் போது மனிதன் நோய்வாய்ப்படுகிறான். அதில் இருந்து விடுபட இயற்கை அளித்த மருந்தே சித்த மருத்துவம். சித்தர்கள் அட்டமா சித்தியை முழுவதுமாக கற்றுப் பல ஆண்டுகள் வாழ்ந்து சித்த மருத்துவத்தை வளர்த்துள்ளனர். விலங்குகள் தனக்கு ஏற்பட்ட பிணியைப் போக்கிக்கொள்ள இயற்கையைத் தேடிச் செல்வது இயல்பு , அதுபோல் இயற்கையோடு வாழ்ந்த மனிதன் தன் அறிவினைப் கொண்டு இயற்கை மருந்துகளைத் தேடிக்கண்டு பயன்படுத்தினான். அவ்வாறு சித்தர்கள் மேலும் பல அரிய மருந்துகளையும், மருத்துவமுறைகளையும் சித்தர் பாடல்களின் வழி ஆராய்வதை எடுத்துரைக்கும் விதமாக அமைகிறது.

**திறவுங்கள் சொற்கள்:** சித்தர்கள் – நாடி – ஐம்பூதங்கள் – ஐம்பொறிகள்

**முன்னுரை:**

இறைவனும் இயற்கையும் இணைந்து படைத்த நம் உடல் பலநோய்களுக்கு உள்ளாகிறது. அந்நோய்க்கான மருந்துகளை நம்சான்றோர் பெருமக்கள் இயற்கையை ஆராய்ந்து அறிந்து எளிமையான முறையில் எளிய மக்களும் பயன்படுத்தும் வகையில் மருந்துப்பொருளை உருவாக்கியுள்ளனர். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டுக்கென மரபுவழி மருத்துவமுறை எனப்படும் சொந்த மருத்துவழி முறைகள் உள்ளன. இன்றைய நிலையில் உலகெங்கிலும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மரபுவழி மருத்துவ முறைகள் இருப்பினும் சித்தமருத்துவமே இன்று வரையிலும் பயன்பாட்டில் உள்ளது. அத்தகு சிறப்பு மிக்க மருத்துவம் பற்றியும் மருத்துவப் பொருட்கள் பற்றியும் அவற்றை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**சித்தர்கள் :**

ஸித் என்ற வடமொழிச் சொல்ஸித் - ஸிது-ஸித்த என உருப்பெற்றது. இதற்கு எட்டுவகையான சித்துக்களை அறிவது என்பது பொருள், அதாவது “சித்தர்கள் “எனத் தமிழில் கூறுவர். எண்பேறு பெற்றவர்களையே சித்தர்கள் எனத்தகுதிப் பெறுவர். தமிழகத்தில் கி. பி.14-ஆம் நூற்றாண்டு முதல்கி. பி. 16-ஆம் நூற்றாண்டு வரை சித்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது இலக்கியவரலாற்றின் வாயிலாக அறியப்படுகிறது. சித்தர்களில் முதன்மைச் சித்தர்கள் பதினெட்டுபேர் அதன் பின்னரே பலர் தோன்றியுள்ளனர் என்பது குறித்தும் சித்தர் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“பாவென்றபஞ்சகர்த்தான்பாதம்போற்றி**
**பண்பானபதினெண்பேர்பாதம்போற்றி”**

என்று அகத்தியர்தர்க் கசாஸ்திரம் 300-ஆவது காப்புச் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். இச்சித்தர்கள் இரசவாதம், காயகற்பம், மந்திரம், மருத்துவம், சோதிடம் முதலியவற்றை முழுமையாக ஆராய்ந்து தேர்ந்தவர்களாவர்.

சித்த வைத்திய நூல்களை இயற்றியவர்கள் பதினெட்டுப்பேர் என பல பதிவுகள் உள்ளன. ஆனால் பதினென் சித்தர்களில் இருந்து வைத்திய நூல்களை இயற்றியவர்கள் சற்றுமாறுபடுகின்றனர்.

**மருத்துவம் கூரிய சித்தர்கள்:**

மருத்துவம் பற்றி பதினெட்டு சித்தர்கள் கூறியுள்ளனர். அவர்கள் பின்வருமாறு, 1.சோதமர் 2.அகத்தியர் 3.சங்கரர் 4.வைரவர் 5.மார்க்கண்டர் 6.வான்மீகர் 7.உரோமர் 8.புசுண்டர் 9.சட்டைமுனி 10.நந்தீசர் 11.திருமூலர்12.காலங்கி 13.மச்சமுனி 14.புத்தியர் 15.கருவூரார் 16.கொங்கணார் 17.போகர் 18.புலிப்பாணி ஆகியோர் ஆவர். தமிழில் இலக்கண நூல்கள் எழுதியவர்கள் மருத்துவ நூல்களையும் எழுதியிருப்பர் இயற்கைச் சிதைவுகளால் அவைமறைந்து இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மருத்துவமும் மருத்துவ முறையும்:**

**“சித்த மருத்துவம் மிகப் பழமையானது மட்டுமல்ல, ஏனைய மருத்துவ முறைகள் மண்ணில் தோற்றம் பெறும் முன்பே தோன்றியது” (1)** என்று திரு.டி.வி.சாம்பசிவம் தனது தமிழ்-ஆங்கில அகராதியில் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னரே மற்ற மருத்துவ முறைகள் தோன்றின.

- சித்த மருத்துவம்.

- ஆயுள்வேதம்.
- உரோம மருத்துவம்.
- யுனானி மருத்துவம்.
- அலோபதி மருத்துவம்.
- ஓமியோபதி.
- கிரேக்க மருத்துவம்.

ஆகியவை சித்தர்கள் வகுத்த வைத்திய முறைகளின் பின் தோன்றின எனலாம்.

**ஐப்பொறியும்ஐம்பூதமும்:**

நம் உடலானது பருவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு என சித்தர்கள் ஐந்து வகைப்படுத்துகின்றனர். அது மட்டு மின்றி உடலையும் ஐம்பூதங்களையும் ஒப்பிட்டு உடலைத்தாங்கும் பாதத்தை நிலம் என்றும், பாதத்திலிருந்து கொப்பூழ் வரைநீரால் ஆனது என்றும், கொப்பூழிலிருந்து மார்பு வரை நெருப்பாலானது என்றும், மார்பிலிருந்து கழுத்து வரை காற்றால் ஆனது என்றும், கழுத்திலிருந்து தலை உச்சிவரைவான வெளி என்றும் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

**உரமடிமேதினி யுந்தியலப்பாம்**
**விரவியதன்முலைமேவிககீழங்கி**
**கருமுலைமீமிசை கைக்கீழிற்காலாம்**
**விரவியகந்தரமேல்வெளியாமே**

**(திருமந்திரம் 1937)**

இப்பஞ்சபூதங்களும் மனித உடலில் செயல்படா விட்டால் அப்போது உயிரானது உடலைவிட்டு நீங்கிச் சென்றுவிடும்.

**கடன்முறை பேசும் என உரைநாவும்**
**உறங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து**
**கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து**
**பூதமும் நாலு சுவாசமும் நின்று**
**நெஞ்சு தடுமாறி வரும் நேரமே**

**(பட்டினத்தார் 18)**

என்ற பட்டினத்தாரின் பாடல் அடிகள் பஞ்சபூதங்கள் அடங்கினால் உடலைவிட்டு உயிர் நீங்கிவிடும் என்பதனை உறுதிப்படுத்துகிறது.

**ஒன்பதுகோள்களும்உடலும்:**

பஞ்சபூதங்கள் மட்டுமல்ல நவகோள்களும் மனித உடலின் அம்சமாக அமைந்திருக்கிறது என்று அமரகவி சித்தேஸ்வரர் தனது நிஜானந்த போதம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1. சூரியன்– உயிர்
2. சந்திரன் – உடல்
3. செவ்வாய் – கண்
4. புதன் - ஸ்பரிசம்
5. குரு - மூக்கு
6. சுக்கிரன் - நாக்கு
7. சனி - காது
8. ராகு - மலவாய்
9. கேது - இனக்குறி

ஆகிய ஒன்பது கோள்களும் நமது உடலின் ஒரு அங்கமாக அமைந்துள்ள.

**மருந்துப்பொருட்களின்மகத்துவம்:**

அறிவுத்துறை வளர்ந்த நிலையிலும் சித்தமருத்துவம் பலநூற்றாண்டுகளாக பழக்கத்தில் உள்ளதை இன்றைய அறிவியலாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர். தாவரங்கள், தாதுப்பொருட்கள், உலோகங்கள், நடமாடும் உயிரினங்கள் ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு சித்தவைத்திய மருந்துகளைச் சித்தர்கள் உருவாக்கியுள்ளனர். உருவாக்கிய மருந்து உப்பு, சுண்ணாம்பு, சிந்தூரம், கற்பம் ஆகியவையாக இருந்தால் சிலதலை முறைகள் அதனைப் பாதுகாக்க இயலும். சில மருந்துகள் வேறு துணைமருந்துகளுடன் கூட்டிப்பயன்படுத்த வெவ்வேறு நோய்கள் தீரும் என்பதே சித்தர்கள் உருவாக்கிய மருந்துகளின் சிறப்பு ஆகும்.

**மருந்துகள் :**

தமிழ் மருந்துகள் அறு பத்து நான்கு வகைகள் ஆகும். நோய்களுக்கு ஏற்றவாறு அதனை உடலுக்கு உள்ளே செலுத்தக்க மருந்துகள் (புறமருந்துகள்) 32, உடலுக்கு வெளியே பயன்படுத்தும் மருந்துகள் (புறமருந்துகள்) 32 எனவகை படுத்தியுள்ளனர். அவை,

**அகமருந்துகள்:**

1.சுரசம் 2.சாறு 3.குடிநீர் 4.கற்கம் 5.உட்களி 6.அடை 7.சூரணம் 8.பிட்டு 9.வடகம் 10.வெண்ணெய் 11.மணப்பாகு 12.நெய் 13.இரசாயணம் 14.இளகம்15.எண்ணெய்16.மாத்திரை 17.கடுகு 18.பக்குவம் 19.தேனூறல் 20.தீநீர் 21.மெழுகு 22.குழம்பு23.பதங்கம் 24.செந்தூரம் 25.நீறு 26.கட்டு 27.உருக்கு 28.களங்கு 29.சுண்ணம்30.கற்பம் 31.சத்து 32.குருகுளிகை

**புறமருந்துகள்:**

1.கட்டு 2.பற்று 3.ஒற்றடம் 4.பூச்சு 5.வேது 6.பொட்டணம் 7.தொக்கணம் 8.புகை 9.மை 10.பொடிதிமிர்தல் 11.கலிக்கம் 12.நசியம் 13.ஊதல் 14.நாசிகாபரணம் 15.களிம்பு 16.சீலை 17.நீர் 18.வர்த்தி 19.சுட்டிகை 20.சலாகை 21.பசை 22.களி 23.பொடி 24.முறிச்சல் 25.கீறல் 26.காரம்

27.அட்டைவிடல் 28.அறுவை 29.கொம்புகட்டல் 30.உறிஞ்சல் 31.குருதிவாங்குதல் 32.பீச்சு

**நாடி:**

மனித உடலில் என்ன நோய் இருக்கிறது என்பதை அறிய முதலில் நாடி பிடித்துப் பார்ப்பது இன்றியமையாத ஒன்று. மருத்துவர் ஐம்பொறிகளைக் கொண்டு உணர்ந்து நோயை கணிப்பர். அதுமட்டுமின்றி வெளித்தோற்றம், உடல்வெப்பம், நாற்றம், நாவின்தோற்றம், சுவைமாறுபாடு, முன்பு நடந்ததை விசாரித்தல், ஒலியைக் கேட்டல் ஆகிய எட்டுத்தேர்வின்முறைகளைக் கொண்டு மருத்துவ மேற்கொள்ளப்படும்.

**“ நாடியென்றால் அண்டபகி ரண்ட மெல்லாம்**

**நாடிஎழு வகைத்தோற்றத் துள்ளாய் நின்ற நாடியது ”**

என்னும் பாடல் நாடியின் சிறப்பை வலியுறுத்துகிறது.

நோயாளிகளில் ஆண்களுக்கு வலக்கரத்திலும் பெண்களுக்கு இடக்கரத்திலும், ஆரை எலும்பின்அருகாமையிலுள்ள குருதிக் குழலில் உணரப்படும் துடிப்பே நாடியாகும். இயல்பான நிலையில் நாடியானது,

**வளிக்கு– 1 மாத்திரைஅளவும்**

**அழலுக்கு–½ மாத்திரைஅளவும்**

**ஐயத்திற்கு– ¼ மாத்திரைஅளவும்**

என்னும்அளவுகளின்படிமருத்துவமுறைகள்அமையும்.

**மருத்துப் பொருள்களின் தேர்வு :**

மனித உடலில் தாது, உலோகம், உப்பு இயக்கத்துடன் செயல்படும் போது அதன் அளவு, பண்பு, செயல்திறன் அதற்கேற்ப மாறுபடும். ஒவ்வொரு பொருளையும் அதனதன், சுவை, வீரியம், பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் இனிப்பு, புளிப்பு, உப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு என ஆறு வகையாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு சுவையும் இருபூதச் சேர்க்கையால் உருவானது. வீரியம், வெப்ப வீரியம், தட்ப வீரியம் என இருவகைப்படுத்தியுள்ளனர். உலகப் பொருட்கள் யாவும் ஐம்பூதத்தால் ஆனவை என்ற சித்தர் கொள்கை மரபுப்படி,

**“ மண்ணுடனே புனல் தீக்கால்**
**முறையாகச் சேர்ந்திட்டால் வருமா மினிப்புத்**
**திண்ணமிலம் துவர்ப்பிரசம்**
**சதாகதியோ டார்தீவின் திடமா முறைப்பும்**
**எண்ணறிய கசப்பு முண்டாம்**
**தண்ணீரில் தணலினைப்பால் எழுமாமுவர்ப்பு**
**உண்ணரிய அறுசுவையின் பிறப்பிதெனுங்**

என்ற முறையில் ஐம்பூதங்களின் சேர்க்கையால் மருந்துப் பொருள்களின் சுவையும் பண்பும் உணரப்படும்.

நோயாளியின் நாடித்தன்மையை அறிந்து ஐம்பூதங்களையும் உணர்ந்து அதனைச் சமப்படுத்தும் சுவை கொண்ட மருந்துப் பொருளை வழங்கும் சித்தர்கள் நோய்களை நீக்கும் வழிமுறைகளை கண்டறிந்துள்ளனர். அவை முறையே 1008 மூலிகைகள், 25 உப்பு, 64 பாடாணம், 120 உபரசம், 9உலோகங்கள் ஆகிய மருந்துப்பொருள்களை உருவாக்கியுள்ளனர்.

**தொகுப்புரை :**

நவீன வளர்ச்சியால் அறிவியல் துறையில் மரபியல் ஆராய்ச்சி மற்றும் மருந்துகளின் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் எவ்வித கருவிகளும் தோன்றும் முன்னர் விஞ்ஞானம், தொழில் நுட்பம், வானியல், நுண்கலைகள் ஆகியவற்றில் சேர்ந்து விளங்கிய சித்தர்கள் பலர் மனிதன் பயன் பெறும் வகையில் 4,448 நோய்களுக்கான மருந்தினையும் சிகிச்சை அளிக்கும் முறையினையும் நமக்குஅ ளித்துள்ளனர். அம்மருத்துவததில் இடம்பெற்றுள்ள மருந்துப்பொருள்களைப் பற்றிய ஆய்வுகள் அமைந்துள்ள.

**அடிக்குறிப்பு:**

1.தமிழ்(சித்த) மருத்துவக்கோட்பாடுகள், எஸ்.அன்சர்அலி, இந்தியமருத்துவம்ஓமியோபதித்துறை, சென்னை 1995, ப.3.

**துணைநின்றநூல்கள் :**

1. சித்தர்கள் கண்ட மானுட ரகசியம்–ரிஷபானந்தர்–சங்கர் பதிப்பகம், சென்னை, 2001.
2. தமிழ்(சித்த) மருத்துவக் கோட்பாடு–எஸ். அன்சர்அலி –இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை,சென்னை– 1995.
3. இலக்கியத்தில்மருத்துவக்கருத்துக்கள்–கலாநிதிஇ.பாலசுந்தரம்–நாட்டார்வழக்கியல்கழகம், யாழ்ப்பாணம், 1990.
4. அகத்தியர்வைத்தியம் 300 –முனைவர் வே.இரா. மாதவன்–தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 2009.